# இமாம் ஷாஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# செய்திமலர்

மார்ச் 2022

மாணவர்களால் மாதந்தோறும் மலரும் மலர்

IMAM SHAFI SCHOOL of EXCELLENCE

## மாதாந்திர ஹதீஸ்

لَا تُمَارِ اَخَاكَ

**"உம் சகோதரரிடம் சண்டை சச்சரவு செய்ய வேண்டாம்."**

- இஸ்லாம் சண்டை சச்சரவுகளை வெறுக்கின்றது.
- சண்டை, சச்சரவு செய்பவர்களைக் கண்டு எல்லோரும் விரண்டோடுவார்கள்.
- சண்டை, சச்சரவுகளிலிருந்து ஒதுங்கி இருப்பவர்களை மக்கள் நேசிப்பார்கள்.




## மகளிர் தின விழாவை ஏன் கொண்டாடுகிறோம் ?

அமெரிக்காவின் தொழிற்புரட்சி நகர் நியூயார்க், இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணிநேரம் வேலை செய்து மிகக் குறைவான ஊதியத்தைப் பெற்றனர். 1857 இல்நியூயார்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர். 1908 இல் வாக்குரிமை கேட்டனர்.

அதன் விளைவு 1910 இல்ஹேகனில் அனைத்துலகப் பெண்கள் மாநாடு கிளாரா ஜெட்கின் தலைமையில் கூடியது. அதன் தொடர்பாக சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

இந்த அமைப்பின் சார்பில் 1911 ஆம்ஆண்டு மார்ச் 19 ஆம் நாள் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட மகளிர் பிரதிநிதிகளின் முதல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கூட்டத்தில் தான், அரசன் லூயிஸ் பிளாங்க் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல் அளித்த நாளான மார்ச் 8 ஐ நினைவு கூறும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம்நாளை சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.பிப்ரவரி 28, 1909 இல் அமெரிக்க சோஷலிஸ்ட கட்சியின் ஒப்புதலுடன் முதன் முதலாக அந்த நாட்டில் பெண்கள் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 1913 வரை பிப்ரவரி மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பெண்கள் நாளைக் கடைப்பிடித்து வந்தனர்.

மார்ச் 25 1911 இல் நியூயார்க்கில் ஒரு கட்டிடத்தில் ஏற்பட்ட ஒருதீ விபத்தில் சுமார் 140-க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். இந்நிகழ்வே அமெரிக்காவில் தொழிலாளர் சட்டத்தைக் கொண்டு வரமிக முக்கிய நிகழ்வானது. அதனை தொடர்ந்து அனைத்துலகப் பெண்கள் நாள் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டது. 1913–1914 களில் முதல் உலகப் போரின் போது ரஷ்யப் பெண்கள் அமைப்பினர் போருக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக பெண்கள் நாள் பேரணிகளை நடத்தினார்கள். இதே ஆண்டில் மார்ச் 8 ஆம் தேதியில் பெண்கள் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. பின்வந்த நாட்களில் ஐ.நா. பெண்கள் அமைப்பு சார்பில் அனைத்துலகப் பெண்கள் நாள் கடைப்பிடிப்பது என முடிவெடுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

மு.ஆதில்( VII std)

## ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய பெண் வீராங்கனைகள்



ஒலிம்பிக் என்பது ஒரு சர்வதேச விளையாட்டு நிகழ்வாகும், இது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். இவை கோடை மற்றும் குளிர்கால விளையாட்டுகள் (ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் இரண்டு வருடங்கள் இடைவெளியில் மாறி மாறி நிகழும்). கோடைக்கால விளையாட்டுகளில் இந்திய விளையாட்டு வீரர்கள் 28 பதக்கங்களை வென்றுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த கர்ணம் மல்லேஸ்வரி, மேரி கோம், சாய்னா நெஹ்வால், பி.வி. சிந்து, சாக்ஷி மாலிக் போன்றோர் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றுள்ளனர். இருபது வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்காக சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பளுதூக்குதலில் வெண்கலப் பதக்கம் வென்று, ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார் கர்ணம் மல்லேஷ்வரி.



அவரைத் தொடர்ந்து, கீதா போகாட் 2010 இல் நடந்த காமன்வெல்த் போட்டிகளில் மல்யுத்தபிரிவில் இந்தியாவிற்காக முதன் முதலில் தங்கம் வென்றவர். ரியோ ஒலிம்பிக் 2016 இல் பேட்மிண்டன் இறுதிப் போட்டியை எட்டியதன் மூலம், ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை பி.வி.சிந்து பெற்றார் ஒலிம்பிக் பதக்கம் வென்ற மிக இளம் வயதுடைய இந்தியப் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார்.

அ. ஹபீபா & க. மரியம்(XI Std)

# சங்க காலப் பெண்களும் இக்கால பெண்களும்(உரையாடல்)



ஆயிஷா : என்ன ஆமினா! உன் கண்கள் சிவந்துள்ளன?
ஆமினா : சற்று அயர்ந்து தூங்கி விட்டேன். அதனால் கண்கள் சிவந்துள்ளது. அருமையான கனவு கண்டேன்.
ஆயிஷா : ஆஹா! என்ன கனவு கண்டாய்?
ஆமினா : ஔவை பாட்டி நம் பள்ளிக்கு வந்திருப்பது போன்ற கனவு.
ஆயிஷா : சிறப்பு! கனவில் என்ன கண்டாய்? உன்னுடன் பேசினாரா ஔவை பாட்டி?
ஆமினா : செல்பேசியில் தொடுதிரையைத் தடவியதை ஆச்சரியமாகப் பார்த்து, இஃது என்ன என்றார்?
ஆயிஷா : அதற்கு என்ன சொன்னாய் ?
ஆமினா : இது செல்பேசி என்று சொல்லி, தூரத்திலிருப்பவருடன் இதன்மூலம் தொடர்பு கொள்ள முடியும் என்று, அவர் கையில் கொடுத்தேன்
ஆயிஷா : ஆஹா! ஔவையின் கையில் ஆன்ட்ராயிடு ஃபோனா?
ஆமினா : இதன் மூலம் வேறு என்ன சாத்தியம் என்றார்? அதன் சிறப்புகளைச் சொன்னேன்.
ஆயிஷா : யூடூபில் ஆத்திச்சூடி செய்யுளைக் காட்டினேன். பாட்டி வியந்து பார்த்தாள்.
ஆமினா : அப்புறம்? என்ன ஆயிற்று?
ஆயிஷா : கூகில் மேப்பில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் எல்லைகளைக் காட்டினேன்.
ஆமினா : உன்னுடைய காலத்தில், இதுபோன்ற வசதி இருந்தால் என்ன செய்திருப்பாய் பாட்டி என்று கேட்டாயா?
ஆயிஷா : கடையெழு வள்ளல் அதியமான் கொடுத்த நெல்லிக்கனிக்குப் பதிலாக ஆண்ட்ராயிட் ஃபோனைக் கேட்டிருப்பியா பாட்டி என்று கேட்டேன்.



ஆமினா : என்ன சொன்னார்?
ஆயிஷா : பொக்கைவாய் தெரிய சிரித்துக்கொண்டே, கையிலிருக்கும் செல்பேசிக்கு அதன் மின்னிருப்பு உள்ளவரை மட்டுமே உயிருடனிக்கும் ஆனால் "அதியமான் கொடுத்தது வெறும் நெல்லிக்கனி அல்ல; பெண்ணே! அது சாகாவரம் தரும் கனி" என்று சொல்லி மீண்டும் சிரித்தார்.
ஆமினா : பாட்டி சொன்னதும் சரிதானே ஆயிஷா! ஓரடி வெண்பாவில் வடித்த ஆத்திச்சூடி பல்லாயிரம் ஆண்டுகள் கழித்தும் பயனாக இருக்கிறது அல்லவா!. அதன் மேம்பட்ட பதிப்பு என்று இதுவரை யாரும் இயற்றவில்லை.ஆனால், நாம் வைத்திருக்கும் செல்பேசிகள் எத்தனைமுறை மாறிக்கொண்டே இருக்கின்றன!
ஆயிஷா : ஆமாம் ஆமினா! இன்று நம் தேடல்களை கூகிலில் தான் தேடுகிறோம். ஆனால், அக்கால மக்கள் சுயமான அறிவினால் பல அனுபவங்களைக் கற்றதோடு, அதை சுவடிகளாகவும் எழுதி வைத்தனர்.
ஆமினா : தற்போதுள்ள வசதிகள் போன்று பழங்காலங்களிலும் இருந்திருந்தால், உலகிலேயே அறிவில் சிறந்த சான்றோர்கள் நம் முன்னோர்களாகத்தான் இருப்பர்.
ஆயிஷா : மிகச்சரியான கூற்று. ஓரடியில் ஆத்திச்சூடி, ஈரடியில் குறள், நான்கடியில் நாலடியார், நான்மணிக் கடிகை, பழமொழி நானூறு போன்ற எண்ணற்ற வாழ்க்கைத் தத்துவ செய்யுள்கள் மட்டும் மொழியாக்கம் செய்யபட்டிருந்தால் உலகம் நிச்சயம் நம்மையும் நம் இலக்கியங்களையும் கண்டு வியந்திருக்கும்!

ஜ. அஸீலா (x Std)

# இஸ்லாம் கூறும் பெண்ணின் பெருமை

இறைவனது படைப்பில் ஈடு இணையில்லாத சிறந்த படைப்பாக மனித இனத்தை அல்லாஹ் படைத்துள்ளான் என்றால் அதுமிகையாகாது.இஸ்லாத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனிப்பட்ட ஒருசிறப்பினை இறைவன் வழங்கியுள்ளான்.அன்று அரபு மண்ணில் பெண் பிறந்தால் ஈனப்பிறவி என உயிரோடு புதைத்தனர். எவ்வளவு பெரிய இழிநிலை, கொடூரம், கொடுமை அல்லவா இச்செயல்? இறையளித்த மறையின் மூலம், மதி கெட்ட மக்களுக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நற்போதனைகளைச் செய்தார். காருண்ய நபி செய்த சாதனையால், அனைத்துப் பெண்களும் நற்பேறு பெற்றார்கள்.

சாதனையின் சிகரத்தில் இன்று பெண்கள் உயர்ந்திருப்பதிற்கு காரணம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் என்றால் அது மிகையாகாது. பெண் இனத்திற்கே பெருமையளிக்கும் பெரும் பேறாக "தாய்மை' என்னும் உயர்ந்த பிடிப்பினை ஆண்களின் மூலமாக இறைவன் வழங்கியுள்ளான். "பெண்கள் ஆண்களின் மறு பாதியாவார்'' என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். திருக்குர்ஆனில் "அன்னிசா'(பெண்கள்) என்ற அத்யாயம் 4-இல் பெண்களைப் பற்றியும், பெண் கல்வி, மணமகளைத் தேர்ந்தெடுத்தல், சொத்துரிமை, வாரிசுரிமை போன்ற பல உரிமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. "கல்வியைத் தேடிப் பெறுவது ஒவ்வொரு முஸ்லிம் ஆண்-பெண் கடமையாகும்'' என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.



இஸ்லாமிய வரலாற்றினை திரும்பிப் பார்த்தால், இஸ்லாமியப் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது. போர்க்காலங்களில் நபி தோழர்களுடன் பெண்களும் கலந்துகொண்டு போர் வீரர்களுக்குத் தண்ணீர் புகட்டுதல், இறந்தவர்களையும்,காயமுற்றவர்களையும் போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்து ஆணுக்கு நிகராக பற்பல சேவைகளை ஆற்றி அழியாப் புகழ் பெற்றுள்ளனர். எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, இறை பொருத்தத்தைப் பெற்ற சிறந்த பெண்மணிகளாகத் திகழ இறைவன் அருள்வானாக!.

மு.ஆயிஷா (VIII C Std)

# இந்திய வரலாற்றில் முத்திரை பதித்த சாதனை பெண்கள்!

இந்திய வரலாற்றில் பல பெண்கள் முத்திரை பதித்துள்ளனர். அவர்களில் சிலரைப் பற்றி இங்கே தெரிந்து கொள்வோம்



<u>கிட்டுர் சென்னம்மா:</u>
கர்நாடகா மாநிலம் பெல்காம் பகுதியில் உள்ள கிட்டுர் எனும் ஊரின் ராணியாக வாழ்ந்து வந்தவர் கிட்டுர் சென்னம்மா. சிறுவயதிலேயே குதிரையேற்றம், வாள் பயிற்சி, வில் வித்தை போன்ற பயிற்சிகளை பெற்றவர். சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட கர்நாடகா மாநிலத்தின் வீரமங்கை கிட்டுர் சென்னம்மா.

<u>ராணி லக்ஷ்மிபாய்:</u>
வட இந்தியாவில் உள்ள ஜான்சி எனும் மாநிலத்தின் அரசியான ராணி லக்ஷ்மிபாய், ஆங்கிலேயர்களுக்கு எதிராக தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டவர். இவர் வில்வித்தை, குதிரையேற்றம், தற்காப்பு ஆகியவற்றில் நன்கு பயிற்சி பெற்றவர். அதனால் தேசத்தின் நாயகி எனப் போற்றப்படுகிறார்.



<u>புலா சௌத்ரி</u>
மேற்கு வங்கத்தின் ஹூக்ளியில் 1970-ல்பிறந்தவர். கில்ப்ரல்டார் ஜலசந்தி, திர்ரீனியன் கடல், குக் ஜலசந்தி, டொரோனிய வளைகுடா, கட்டாலின கால்வாய் ஆகிய ஐந்து கண்டங்களில் உள்ள கடல் கால்வாய்களை நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண். உலகஅளவில் ஏழு கடல்களை நீந்திக் கடந்த முதல் பெண்ணும் இவரே. பத்மஸ்ரீ, அர்ஜுனா உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

<u>மற்ற முத்திரை பதித்த சாதனை பெண்கள்:</u>
நீதிபதி அன்னா சாண்டி(முதல் பெண் நீதிபதி), சுசேத்தா கிரிப்லானி (இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர்), சரோஜினி நாயுடு (இந்தியாவின் நைட்டிங்கேல்), விஜய லட்சுமி பண்டிட்(இந்தியாவில் கேபினட் பதவி வகித்த முதல் பெண்)

அதிதி பந்த்(1983-ல் அண்டார்டிகா கண்டத்தை அடைந்த முதல் இந்தியப் பெண்), பச்சேந்த்ரி பால்(1984-ல் மவுண்ட் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் இந்தியப் பெண்) பத்மஸ்ரீ, தேசிய சாகச விருது ஆகிய விருதுகளைப் பெற்றவர். ராதிகா மேனன்(2016-ல் கடலில் அரிதான துணிகரச் செயலுக்கான விருதை பெற்ற முதல் பெண்), டயானா எடுல்ஜி(இந்திய மகளிர் ஒருநாள் கிரிக்கெட் அணியின் முதல் கேப்டன்), முனைவர் ஆஷா பாண்டே(செவாலியே விருது வாங்கிய முதல் இந்தியப் பெண்) .

ஷே. அஸ்மா (XII Std)

## மகளிர் தின விழா கவிதைகள்

புதுமைகள் படைத்தாய்
திண்மையான உறுதி பூண்டாய்.
நிமிர்ந்து நடந்து
நிலாவினில் கால்சுவடி பதித்தாய்!
பெண்ணே! நீ இல்லையெனில்
இவ்வுலகம் சுழற்சி இல்லை
எத்தனை எத்தனை கண்டுபிடிப்புகள்!
அறிவியலையும் ஆட்கொண்டாய்!
பார்புகழ , பாரதம் தோற்றது உன்னிடம்
இல்லம் முதல் இவ்வுலகம் வரை
இமயம் கொண்டது
உன் சாதனை! மகத்தான சாதனை

ஹா. அஜானா(VI Std)







கண் இமைபோல் காப்பதும்பெண்!
கனிவோடு உபசரிப்பதும் பெண்!
கண் மூடித்தனமாய்நம்புவதும் பெண்!
கண்ணீர் துடைப்பதும் பெண்!
கண்ணீர் விடுவதும் பெண்!
கணக்கு போட்டு வாழ்பவளும் பெண்!
சாதிக்க துடிப்பவளும் பெண்!
சாதனை படைப்பவளும் பெண்!
பெருமை மிகு பெண்களுக்கு
இனிய மகளிர்தின நல்வாழ்த்துகள்!

அ. முஹம்மது(VI Std)

அன்னை தமிழே!
மகளிர் தின வாழ்த்துகள்!
என் அன்னையும் நீயும் ஒன்றே!
எனக்கு சொல் தந்தது நீ.
அதை சொல்லித் தந்தவள் என் அன்னை.
நிலமகளே!
மகளிர் தின வாழ்த்துகள் .
நீ என்னை தாங்குவதால் இந்தநொடி வாழ்கிறேன்.
நதி பெண்ணே உனக்கும் என் வாழ்த்துகள்.
நின் தாகம் தணிக்கும் செயலைப்பார்த்து.
பாரதியின் கனவு நனவாச்சு.
பாரினில் பெண்கள்! வெற்றிநடை போட்டாச்சு .
அடுப்பை படிப்பு வென்றிடுச்சு.
என் அப்பத்தாவும் ஆன்லைனில் வந்தாச்சு.
அனைத்து துறைகளிலும் பெண்ணாட்சி வந்தாச்சு.

மு. ஸா. ருகையா (VI Std)

# இந்தியாவின் முதல் பெண் பிரதமர் இந்திராகாந்தி பற்றிய ஒரு பார்வை

**நேருவின் மகள், நாட்டின் முதல் பெண் பிரதமர், இந்தியாவின் இரும்புப் பெண்மணி, பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசம் பிரிந்து, தனிநாடாக உருவாகக் காரணமானவர், நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியவர், தனது பாதுகாவலர்களாலே சுட்டுக் கொல்லப்பட்டவர் என இந்திய அரசியலில் இந்திரா காந்தி ஏற்படுத்திய சுவடுகளும் தாக்கமும் காலத்தால் அழியாத வரலாறு.**

**முன்னாள் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, கமலா தம்பதியினரின் ஒரே வாரிசான இந்திரா பிரியதர்சினி நவம்பர் 19, 1917 அன்று அலகாபாத் நகரில் பிறந்தார். தனது தந்தையும், தாத்தாவும் (மோதிலால் நேரு) சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு, சிறை சென்றவர்கள் என்பதால் இயல்பாகவே இந்திராவின் ரத்தத்தில் தேசப்பற்று கலந்திருந்தது.**

**1947-இல் நாடு சுதந்திரம் பெற்று, 1952ஆம் ஆண்டு நாட்டின் முதல் மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. முதல் பிரதமராக இந்திராவின் தந்தை ஜவஹர்லால் நேரு பதவியேற்றுக் கொள்ளவே, தந்தையின் அரசியல் வாழ்க்கையை அருகிலிருந்து கற்றுக்கொண்டார். நேரு மறைவிற்கு பிறகு, லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். அவரது அமைச்சரவையில் இந்திரா காந்தி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். ஆனால், லால்பகதூர் சாஸ்திரி திடீரென காலமாகவே நாட்டின் இடைக்கால பிரதமராக குல்சாரிலால் நந்தா பொறுப்பேற்றுக் கொண்டார். அவரைத்தொடர்ந்து, நாட்டின் 3வது பிரதமராக, முதல் பெண் பிரதமராக இந்திரா காந்தி பொறுப்பேற்றுக் கொண்டார்.**



**வங்கிகளை தேசியமயமாக்கியது, மன்னர்களுக்கு மானியம் வழங்கும் நடைமுறையை ஒழித்தது, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது, பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்தது,வங்க தேசத்திற்கு படை அனுப்பி, அந்நாட்டிற்கு விடுதலையை பெற்றுத் தந்தது, அணு ஆயுத சோதனை நடத்தி இந்தியாவை அணுஆயுத பலம் வாய்ந்த நாடாக உலகிற்கு பிரகடனம் செய்தது, வெளியுறவுக் கொள்கையில் புதிய பாதையை வகுத்தது என இந்திரா காந்தியின் 15 ஆண்டுகால ஆட்சியில் அவரது சாதனைகளை பட்டியலிட்டால் அது நீண்டு கொண்டே போகும்.**

**1984-ம் ஆண்டில் பொற்கோவிலில் ஆயுதங்களை குவித்துக்கொண்டு பதுங்கியிருந்த சீக்கிய பிரிவினைவாதிகளை 'ஆபரேஷன் புளூ ஸ்டார்' என்ற பெயரில் ராணுவத்தினர் பொற்கோயிலுக்குள் நுழைந்து தாக்கியதன் மூலம் சீக்கியத் தீவிரவாதம் முடிவுக்கு வந்தது.**

**இந்திராவின் சீக்கியப் பாதுகாவலர்களால் அவரது உயிருக்கு ஆபத்து என்று உளவுத்துறை எச்சரித்தது. உயிரையே இழக்க நேர்ந்தாலும் மதத்தின் அடிப்படையில் தனது பாதுகாவலர்களை மாற்ற இந்திரா காந்தி மறுத்துவிட்டார். இச்சூழலில், பொற்கோயில் தாக்குதலுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக, இந்திரா காந்தியின் இரு சீக்கிய மெய்காவலர்களால் 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். தேசம் பிளவுபட்டு விடக்கூடாது என்பதற்காக 66 வயதில் தனது உயிரையே அர்ப்பணித்த 'இரும்புப் பெண்மணி' இந்திரா காந்தி ஆவார்.**

**ஜ.முஹம்மது அன்ஸர் (IX Std)**

## மழலைகளின் படைப்பாற்றல்




அ. முஹம்மது (I Std)



அ. முஹம்மது ஃபாஇஜ் (II Std)




அ. சஃபியா (III Std)



அ. அஹ்சன் ஃபஸிஹ் (IV Std)



ர.ஜாபிரா (V Std)